**செய்தி வெளியீடு எண்: 343** **நாள்: 16.05.2020**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

கொரோனா வைரஸ் பரவல் உலகப் பொருளாதாரச் சூழலில் ஏற்படுத்தியுள்ள விளைவுகளால், சில நாடுகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் தங்கள் முதலீடுகளை இந்தியாவிற்கு இடம் பெயர்ந்திட முடிவெடுத்துள்ளன. அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, அம்முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில், அரசு உயர் அதிகாரிகள், துறை தலைமை அதிகாரிகள், ஜப்பான், கொரியா, சிங்கப்பூர், அமெரிக்கா மற்றும் தைவான் நாடுகளைச் சார்ந்த தொழில் கூட்டமைப்பினர்கள் அடங்கிய, **முதலீடுகளை ஈர்ப்பதற்கான சிறப்பு பணிக் குழு** (Special Investment Promotion Task Force) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு பணிக்குழுவின் முதல் கூட்டம் இன்று (16.5.2020) காலை 11.00 மணியளவில், தலைமை செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்றது. தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசு உயர் அதிகாரிகள், கொரிய தொழில் கூட்டமைப்பின் இயக்குநர் திரு ஜங்ஹி ஹான், தாய்வான் தொழில் கூட்டமைப்பின் இயக்குநர் திரு தாவே ஸாய், ஹிண்டாய் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. எஸ் எஸ் கிம், தொழிலதிபர்கள் திருமதி. மல்லிகா சீனிவாசன் (USIBC), திரு. சக்திவேல் (IACC), திரு. ஸ்ரீதர் வேம்பு (ZOHO),

திரு. ஹரி தியாகராஜன் (CII), திரு. பொன்னுசாமி (CII), திரு. பீட்டர் நிக்கல்சன் (Cheyyar SEZ), திரு. வைபவ் மித்தல் (Mahindra), திரு. குருராஜ் (WISTRON), திரு. அர்ஜித் சென் (FLEX), திரு. சீனிவாசன் சுந்தரம், (Lincoln Electric), USISPF மற்றும் Enterprise Singapore அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை தெரிவித்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**